# இயல் 7.8 - புள்ளியியல்

பயிற்சி எண் :: 7.8.1.1.A

புள்ளியியல் - தொடர்ச்சியற்ற தரவுகளின் சேகரிப்பு மற்றும் அமைப்பு - மீள்பார்வை

Statistics - Discrete data collection & Organisation - Recap

## புள்ளியியல் - தொடர்ச்சியற்ற தரவுகளின் சேகரிப்பு மற்றும் அமைப்பு - மீள்பார்வை

முந்தைய வகுப்புகளில் கற்ற தொடர்ச்சியற்ற தரவுகளின் சேகரிப்பு மற்றும் அவற்றின் அமைப்புகளை ஒருமுறை மீள்பார்வை செய்வோம். தொடர்ச்சியற்ற தரவு என்பது, ஒரு குறிப்பிட்ட வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொருவரிடமும் உள்ள பொருட்களின் எண்ணிக்கை,. . . போன்ற தனித்தனியான தரவுகளைக் குறிக்கும்.

1) கனிமொழி தினமும் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் போது அவள் வழியில் எதிர்கொள்ளும் மகிழுந்துகளை கணக்கிட்டு வந்தாள். ஒரு குறிப்பிட்ட வாரத்தில் அவள் எதிர்கொண்ட மகிழுந்துகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அதனைப் பயன்படுத்தி கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும். ( = 2 மகிழுந்துகள்)

| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|



(i) அதிகமான மகிழுந்துகளை எதிர்கொண்ட நாள் எது?

செவ்வாய் - 6 மகிழுந்துகள்

(ii) சமமான எண்ணிக்கையில் மகிழுந்துகளை எதிர்கொண்ட நாட்கள் எவை?

திங்கள் மற்றும் வெள்ளி - 4 மகிழுந்துகள்

(iii) குறைவான எண்ணிக்கையில் மகிழுந்துகளை எதிர்கொண்ட நாள் எது?

வியாழன் - 0 மகிழுந்து

(iv) புதன்கிழமை அன்று அவள் எதிர்கொண்ட மகிழுந்துகளின் எண்ணிக்கை எவ்வளவு?

2 மகிழுந்துகள்

2) மந்தாரை மற்றும் அவளின் நண்பர்கள் ஒரு மாதத்தில் நூலகத்திற்குச் சென்று வந்த முறைகளின் விவரங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பொறுத்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். மந்தாரை - 24 முறை, கவிதா - 21 முறை, அருள் - 16 முறை, மணிமாறன் - 8 முறை, அருணா - 24 முறை, மலர் - 31 முறை.

தரவுகளை முறைப்படுத்துதல் (ஏறுவரிசையில்) ▶▶ வினாக்களுக்கு விடை பகர்தல்

| **பெயர்** | **முறைகள்** |
|---|---|
| மணிமாறன் | 8 |
| அருள் | 16 |
| கவிதா | 21 |
| மந்தாரை | 24 |
| அருணா | 24 |
| மலர் | 31 |

(i) அதிக முறை நூலகத்திற்குச் சென்று வந்தவர் யார்?

மலர் - 31 முறை

(ii) 20 முறைகளுக்கு மேல் நூலகத்திற்குச் சென்று வந்தவர்களின் விவரங்களை எழுதுக.

கவிதா - 21 முறை

மந்தாரை - 24 முறை

அருணா - 24 முறை

மலர் - 31 முறை

(iii) குறைவான முறை நூலகத்திற்குச் சென்று வந்தவர் யார்?

மணிமாறன் - 8 முறை


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 17th January, 2023 :: 18:41 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**